# குதிரையும் கழுதையும் | தமிழ் கதைகள் | Horse And The Donkey | Small Story In Tamil

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில், பண்ணையின் சொந்தக்காரன் ஒருவன் இருந்தான். **அவனுக்கு குதிரை ஒன்றும் கழுதை ஒன்றும் இருந்தன. குதிரைக்கு எப்பவுமே நல்ல சாப்பாடு கிடைக்கும். ஆனால் கழுதைக்கு அதுபோல் கவனிப்பும், உணவும் கிடைக்கவில்லை.** எனவே கழுதைக்கு எப்போதும் ஒரு மனக்கவலை இருந்தது.

**"நான் நன்கு வேலை செய்தும் என்னை சரியாக கவனிக்கவில்லை, ஆனால் வேலையே செய்யாமல் இருக்கும் குதிரையை மிகவும் நன்றாக கவனிக்கிறார்கள்"** என்று கழுதை எண்ணியது. நாட்கள் கடந்து சென்றன, ஒரு நாள் நாட்டில் யுத்தம் ஏற்பட்டது. பண்ணைக்காரன் தன் குதிரை மேல் ஏறி யுத்தத்திற்கு சென்றான்.

பல நாட்களுக்குப் பின் குதிரையையும், எஜமானனும் வீட்டிற்கு திரும்பினர். **வீட்டிற்கு வரும்போது குதிரையின் காலில் பலமான அடி பட்டிருந்தது.** காயத்தினால் உடல் புண்ணாகி இருந்த குதிரையைப் பார்க்க கழுதைக்கு மிகவும் பாவமாக இருந்தது.

இதுவரை குதிரைக்கு கிடைத்த உபசரிப்பு பற்றி தவறாக நினைத்துக் கொண்டிருந்தது கழுதைக்கு புரிந்தது. கழுதை குதிரை இடம் சென்று, **"நண்பா, இந்நாள்வரை உனக்கு கிடைத்த உபசரிப்பை நினைத்து நான் பொறாமை பட்டுள்ளேன். உன்னை நான் தவறாக எண்ணி உள்ளேன், தயவு செய்து என்னை மன்னித்துவிடு"** என்று கூறியது.

அன்று முதல் கழுதை குதிரையிடம் நட்பாக பழகியது. இருவரும் நல்ல நண்பர்களாக மாறினர். அதுமட்டுமில்லாமல் கழுதை தன்னை பண்ணைக்காரன் சரியாக கவனித்துக் கொள்ளவில்லை என்று கழுதை வருத்தப் படவுமில்லை.

நீதி : **நமக்கு கிடைப்பதில் திருப்தி அடைய வேண்டும்.**

---

மேலும், இதை போன்ற கதைகளை வாசிப்பதற்கு கீழே இருக்கும் link-ஐ click செய்யவும்...

**https://www.tamilkathaigal.com/**

---

ஆங்கில கதைகளை வாசிப்பதற்கு கீழே இருக்கும் link-ஐ click செய்யவும்...

**https://www.shortstoryenglish.com/**